# திருப்பத்தூர் நகராட்சி

2020–ஆம் ஆண்டு மே மாதம் 29–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள்.29.05.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)
திருப்பத்தூர் நகராட்சி.

## பொருட்கள்

44) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட பணிக்கு 5.03.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம்

| | |
|---|---|
| Providing 110 mm PVC Water Supply Distribution Pipe line to Aariff Nagar at Ward No 32 (Estimate Amount – 9.70 இலட்சம் ) | 1. திரு. எ.சி. சுரேஷ்குமார்<br>(0.10% சதவீதம்) மதிப்பீட்டை விட குறைவு.<br><br>2. திரு. என். பூபதி<br>(0.97% சதவீதம்) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.எ.சி.சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.10% சதவீதம்) வழங்கியுள்ளார். எனவே மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எ.சி. சுரேஷ்குமார், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு
   வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 0197/2020/இ1

45) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட பணிக்கு 11.03.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம்

| | |
|---|---|
| Providing Block Top Surface Road to TNHB Phase 1 ward No.34<br>(Estimate Amount : 16.00Lakhs) | 1. திரு. எஸ். குணசேகரன்<br>(0.04% சதவீதம்) மதிப்பீட்டை விட குறைவு.<br><br>2. திரு. எஸ். ராஜேந்திரன்<br>(0.81% சதவீதம்) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.எஸ்.குணசேகரன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.04% சதவீதம்) வழங்கியுள்ளார். எனவே மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எஸ். குணசேகரன், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு
வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 0197/2020/இ1

46) திருப்பத்தூர் நகராட்சியில் வேலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் (CWSS) மூலம் 5.57 MLDயும், தெண்பெண்ணை திட்டத்தின் மூலம் 1.63 MLDயும் குடிநீர் பெறப்பட்டு, மொத்தம் 7.20 MLD குடிநீர் திருப்பத்தூர் நகராட்சியில் கீழ்கண்டுள்ள வார்டு பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| குடிநீர் ஆதாரம் | குடிநீர் விநியோகம் செய்யப்படும் வார்டு | குடிநீர் வழங்கப்படும் நாட்கள் | குடிநீர் வழங்கப்படும் மணி நேரம் |
|---|---|---|---|
| CWSS | 1 வது வார்டு முதல் 31 வது வார்டு வரை | இரண்டு நாட்களுக்கு ஒரு முறை | இரண்டு மணி நேரம் |
| LOCAL BORE WELL POWER PUMP | 32 | இரண்டு நாட்களுக்கு ஒரு முறை | இரண்டு மணி நேரம் |
| தென்பெண்ணை குடிநீர் திட்டம் | 33&34 | இரண்டு நாட்களுக்கு ஒரு முறை | இரண்டு மணி நேரம் |
| CWSS & LOCAL BORE WELL POWER PUMP | 35&36 | இரண்டு நாட்களுக்கு ஒரு முறை | இரண்டு மணி நேரம் |

மேற்படி நகராட்சி விரிவாக்கம் பொழுது புதியதாக இணைக்கப்பட்ட பகுதியான வார்டு எண் 3 (ஒரு பகுதி) வார்டு எண் 32 ,33,34,35 மற்றும் 36 ஆகிய பகுதிகள் பஞ்சாயத்து பகுதியாக இருந்ததால் அப்பகுதிக்கு 40 LPCD என்ற விகிதத்தில் CWSS திட்டத்தில் கணக்கிட்டு பைப் லைன் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனை தற்பொழுது ஒரு நபருக்கு 90 LPCD என்ற விகிதத்தில் மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிடவும் மற்றும் வார்டு எண் 26 காந்தி நகர் பகுதிக்கு பிரதான பைப் லைன் அமைத்தல் பணி செய்திட ரூ.865.92 இலட்சத்திற்கு திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டு 36 வார்டு பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திட்டப்பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Name of the Work | Nos | Estimate Amount Rs in Lakhs |
|---|---|---|---|
| 1 | Proposal for upgrading water supply from 40 LPCD to 90 LPCD to Tirupattur Added Areas of Ward No. 32,33,34,35, 36 and Ward No 26 Ganthi Nagar Area Feedar Main Line Work inTirupattur Municipality | 1 | 865.92 |
| | **Total** | **1** | **865.92** |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்287/2020/இ1

47) திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் தற்போது கோடை காலத்தினை முன்னிட்டு பிற உபயோகங்களுக்கு தண்ணீர் அதிகம் தேவைப்படுவதால் நகர்ப்பகுதியிலுள்ள குடிசைப்பகுதி மற்றும் விரிவாக்கப்பகுதியான வார்டு எண் 32,33.34,35 மற்றும் 36, வார்டு 3 (பகுதி) ஆகியவற்றில் இயங்காத நிலையில் உள்ள சிறுமின் விசைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளின் பழுதுகளை சரி செய்து இயக்கத்திற்கு கொண்டு வர தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி குடிநிர் நிதி 2020–2021–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/2020/இ1

48) திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் தற்போது கொரோனா தடை உத்திரவு காரணமாக தினக்கூலி பணியாளர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், நகர்ப்புற வீடற்றவர்கள், தூய்மை பணியாளர்கள் என அனைவருக்கும் அம்மா உணவகத்தின் மூலம் மூன்று வேளையும் உணவு தயார் செய்யப்பட்டு வழஙகப்பட்டு வரும் சூழ்நிலையில் அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகளான சமையலறை தளம் மற்றும் தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி சரி செய்திடவும், புதிதாக Boiler வாஙகிப் பொருத்தவும், சமையல் உபகரணஙகளிலுள்ள பழுதுகளை சரி செய்யவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி பொது நிதி 2020–2021–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/2020/இ1

49) திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் முக்கிய பகுதிகளான புதிய பேருந்து நிலையம், இரட்டைமலை சீனிவாசன் தெரு மற்றும் திருவண்ணாமலை நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட உயர்கோபுர மின் விளக்குகளிலுள்ள விளக்குகள் பழுதடைந்து அப்பகுதிகள் இருளாக உள்ளதால் பழுதான மின் விளக்குகளை மாற்றி மின் சேமிப்பு செய்யும் நடவடிக்கையாக அனைத்து விளக்குகளையும் 150 Watts LED விளக்குகளாக மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி பொது நிதி 2020–2021–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/2020/இ1

50) திருப்பத்தூர் நகராட்சி பி.கே.நகர் பகுதியிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து ஜெயா நகர் பகுதிக்கு தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஜெயா நகர் பகுதியானது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஜெயா நகர் பகுதியானது குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியாகவும், மேடான பகுதியாகவும் இருப்பதால் சீரான குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை. எனவே, வாணியம்பாடி சாலையிலுள்ள தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியிலிருந்து பி.கே. நகர் மேல்நிலைத் தொட்டிக்கு செல்லும் குடிநீர் குழாயிலிருந்து ஜெயா நகர் பகுதிக்கு பைப் லைன் அமைத்து கேட் வால்வு பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி குடிநீர் நிதி 2020–2021–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/2020/இ1

51) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் தினசரி டெங்கு தடுப்பு பணிகள் 66 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசுப்புழுக்களை கட்டுப்படுத்த அபேட் (டெமிபாஸ்) தினசரி நீர் சேகரிக்கும் இடங்களில் பயன்படுத்தவும் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த பைத்திரம் 2% பயன்படுத்தி புகை பரப்பவும், பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி கீழ்குறிப்பிட்டுள்ள பொருட்களை M/S.Paramount Pesticidies Limited, Uttar Pradesh நிறுவனத்தில் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பொருள் | அளவு | தொகை |
|---|---|---|---|
| 1 | அபேட் (டெமிபாஸ்) | 250 லிட்டர் | 2.00 இலட்சம் |
| 2 | பைரித்திரம் 2% | 250 லிட்டர் | 3.50 இலட்சம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி M/S.Paramount Pesticidies Limited, Uttar Pradesh நிறுவனத்தில் அபேட் (டெமிபாஸ்) பைரித்திரம் 2% வாங்கி பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/2020/எச்1

52) திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.26 காந்தி நகர் 7–வது குறுக்குத் தெரு மற்றும் இதனைச் சார்ந்த குறுக்குத் தெரு பகுதிகளுக்கு அரசு பூங்கா சாலையிலுள்ள 11.35 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியிருலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பகுதியானது குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியாக இருப்பதாலும், மேடான பகுதியாக இருப்பதாலும் சீரான குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை. எனவே, புதுப்பேட்டை ரோடு 4–வது தெருவில் உள்ள லைன் கிணறு குடிநீர் விநியோகக் குழாயில் இணைப்பு எடுத்து புதுப்பேட்டை ரோடு 7–வது தெருவிற்கு பைப் லைன் மற்றும் கேட்வால்வு பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி குடிநீர் நிதி 2020–2021–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/2020/இ1

53) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட சாலைகள் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் மிக முக்கியமான சாலைகளாக இருப்பதாலும், போக்குவரத்து வாகனங்கள் உபயோகத்திற்கு அதிகமாக உள்ளதாலும் இச்சாலைகளை பராமரிக்க மிகுந்த சிரமம் ஏற்படுவதால், பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மூலம் பராமரிப்பு பணிகள் செய்யவும் மேற்படி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) **<u>கோவிலூர் சாலை (ஜலகம்பாறை சாலை) கி.மீ 0/0–0/4–(360 மீ)</u>** – இச்சாலையானது கி.மீ 107/2 சேலம்– திருப்பத்தூர் – வாணியம்பாடி சாலை (NH–179)–ல் 360 மீ சாலை, இதர மாவட்ட சாலையான கி.மீ 0/2 திருப்பத்தூர்–ஜலகம் பாறை சாலை (ODR)–ல் இணைகிறது.

2) **<u>அந்தனேரி–கௌதம்பேட்டை சாலை–(470மீ) –</u>**இச்சாலையானது கி.மீ 107/8 ஒகேனக்கல்–பென்னாகரம்–தர்மபுரி–திருப்பத்தூர் சாலை (SH 60)–ல் 470மீ சாலை, கி.மீ 104/2 சேலம் – திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலையில் இணைகிறது. இச்சாலையில் தற்போது CH. 0010–ல் 1x1.00 மீ கால்வாய் மூடி பழுதான நிலையிலும், CH 0112-ல் 2x1.20 மீ மற்றும் CH 0418–ல் 1x2.00 மீ. ஆர்.சி.சி சிறுபாலங்கள் பழுதான நிலையிலும், CH0224–ல் 1x3.00மீ ஆர்சிசி சிறுபாலம் நல்ல நிலையிலும் உள்ளது.

3) **<u>அவ்வை நகர் சாலை கி..மீ 0/0–2/0 (1565மீ)–</u>** இச்சாலையானது கி.மீ 0/10 திருப்பத்தூர் நாட்றம்பள்ளி சாலை (MD716)–ல் 1565மீ சாலை, கி.மீ23/4 பர்கூர்–திருப்பத்தூர் சாலை (SH 131)–ல் இணைகிறது. இச்சாலையில் CH 0070–ல் 1x1.20மீ மற்றும் CH 1520 1x1.20மீ அளவு Cut stone சிறுபாலங்கள் சேதமான நிலையிலும், Ch 0450–ல் 1x0.60மீ கால்வாய் மூடி பழுதான நிலையிலும் CH 1320–ல் 2x0.90மீ Pipe culvert நல்ல நிலையிலும் உள்ளன.

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகராட்சிக்கு சொந்தமான, கோவிலூர் சாலை (360மீ) , அந்தனேரி – கௌதம் பேட்டை சாலை (490மீ) மற்றும் அவ்வை நகர் சாலை (1565மீ) ஆகிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்யவும் நெடுஞ்சாலை துறை மூலம் பராமரிக்கவும் மன்றம் அங்கீகரிக்கிறது.

ந.க.எண்357/2020/இ1

54) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி துய்மை பணியாளர்கள் மூலம் திடக்கழிவுப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு சுகாதார சீர் கேடுகள் ஏற்படாமல் தொற்று நோய் தடுப்பு பணிகளில் பயன்படுத்தி நகரினை தூய்மையாக பராமரித்திட கிருமி நாசினி மற்றும் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் இடங்களில் உடல் வெப்பநிலை பரிசோதனை கருவி ஆகியவை அரசு பதிவு பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வீஸ், திருச்சி நிறுவனத்தில் கொள்முதல் செய்து பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.50. இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **பொருட்கள் விவரம்** | **அளவு/எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் 33% குளோரினேஷன் | 1 ½ டன் |
| 2 | சுண்ணாம்பு தூள் | 10 டன் |
| 3 | N-95 முக கவசம் | 1000 எண்ணிக்கை |
| 4 | தெர்மல் ஸ்கேனர் | 10 எண்ணிக்கை |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி பொருட்களை அரசு பதிவு பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வீஸ், திருச்சி நிறுவனத்தில் வாங்கி பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை SDRF அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**.2123/2019/எச்1)

55) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.K.Dis.No.30813/J3/2018 நாள்.11.12.2018-ல் ஒப்பந்த பணியார்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள V.K காண்ட்ராக்டர்ஸ், எண்.23, சோலம்பேடு மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை-53 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவுபடி, ஒரு வருட ஒப்பந்த காலம் 28.02.2020-ல் முடிவடைந்துவிட்டதால், பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி மேற்படி பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 29.02.2020 முதல் மறு உத்தரவு வரும் வரை மேற்படி நிறுவனத்தின் மூலம் 99 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள தெரிவித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பு பணி மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் நடைபெற வேண்டி இருப்பதாலும், 12 நிரந்தர தூய்மை பணியாளர்கள் 30.06.2019-ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாலும், 5 நிரந்தர தூய்மை பணியாளர்கள் 30.06.2020-ல் பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளதாலும், மேற்படி பணிகளை தங்கு தடையின்றி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.K.Dis.No.30813/J3/2018 நாள்.11.12.2018-ல் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன்படி, 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஒரு வருட காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறை உத்தரவின் பட்டியல்படி, மேற்படி பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஊதிய விகிதத்தில் 115 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள V.K காண்ட்ராக்டர்ஸ், எண்.23, சோலம்பேடு மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை-53 நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும், அதற்கான ஊதிய தோராய செலவினத் தொகை ரூ.150 இலட்சத்திற்க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு:</u>-

கொரோனா தடுப்பு பணி, டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேலும், பொது சுகாதார பணிகளின் அவசியத்தினை கருதி V.K.காண்ட்ராக்டர்ஸ், எண்.23, சோலம்பேடு மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை-53 நிறுவனத்திற்கு மேற்படி பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஊதிய விகிதத்தில் திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கவும், அதற்கான ஊதியத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**.2356/2018/**எச்**1)

56) மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் 22.05.2020-ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளில் 60 வயது அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள அறிவுறித்தியுள்ளார். எனவே, இந்நகராட்சி பகுதிகளில் 60 வயது அதற்கு மேற்பட்டவர்களின் நலன் கருதி கீழ்காணும் 12 இடங்களில் 23.05.2020. முதல் 06.06.2020 வரை மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்துவதற்கும், அதில் பங்கேற்கும் மருத்துவர்கள், மருத்துவ குழுப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கொண்ட குழு நபர்கள் ஆகிய 50 நபர்களுக்கு உணவுகள், தண்ணீர் உள்ளிட்ட ஏற்பாடுகள் மருத்துவ முகாம் குறித்த விளம்பர பேனர்கள் 9 எண்ணிக்கையில் வைக்கவும், பந்தல் மற்றும் இருக்கை ஏற்பாடுகள், வாகனங்களில் ஒலிப்பெருக்கி அறிவிப்புகள் மற்றும் டோக்கன் வழங்கவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.60000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாள் | வார்டு எண் | பரிசோதனை முகாம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 1 | 23.05.2020 | 1,6,7,15,16,17 | அரசு பூங்கா பள்ளி |
| 2 | 26.05.2020 | 26,27,28 | குட்வில் மேல்நிலைப்பள்ளி |
| 3 | 27.05.2020 | 18,19,20,21,25 | ஏ.ஜி.எஸ். மஹால் |
| 4 | 28.05.2020 | 8,13,14 | தருமராஜா கோயில் தெரு |
| 5 | 29.05.2020 | 29,30,31 | கௌதம்பேட்டை நகராட்சி பள்ளி |
| 6 | 30.05.2020 | 9,12 | ஏ.ஜே.பி.மஹால் |
| 7 | 01.06.2020 | 10,11,32 | நூருல் ஹீதா பள்ளி |
| 8 | 02.06.2020 | 2,3,4,5 | சமுதாய கூடம், போஸ்கோ நகர் |
| 9 | 03.06.2020 | 22,23,24 | சமுதாய கூடம், அப்பாய் தெரு |
| 10 | 04.06.2020 | 33,34 | நகராட்சி பள்ளி, வேலன் நகர் |
| 11 | 05.06.2020 | 35,36 | நகராட்சி பள்ளி, அவ்வை நகர் |
| 12 | 06.06.2020 | 32 | நகராட்சி பள்ளி, திருமால் நகர் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மருத்துவ முகாம்கள் நடத்தவும், அதற்கான செலவினத்தை SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**.298/2020/எச்1)

57) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் டெங்கு மற்றும் இதர நோய் தடுப்பு பணிகள் தூய்மை பணியாளர்கள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்நகர் பகுதிகளில் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்தும் பொருட்டு தினசரி புகை பரப்புதல் பணி நடைபெற்று வருகிறது. எனவே, வணிக வளாகங்கள், மாடிப் பகுதிகள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் வீடுகளின் உட்புறங்களில் சென்று புகை பரப்பி டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் விவரப்படி சிறிய ரக புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் மற்றும் அதற்குரிய சிலிண்டர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2-Ltrs Handy Fogging Mechine | 10 |
| 2. | Handy Fogging Mechine 2-Ltrs Handy Fogging Mechine | 300 |

<u>அலுவலக குறிப்பு</u>:-

பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு பொது மக்களின் நலனை கருதி மேற்படி புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (2-Ltrs Handy Fogging Mechine, 2-Ltrs Handy Fogging Mechine) வாங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.375/2020/எச்1)

58) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர் கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நலன் கருதி நோய் எதிர்ப்பு திறன் அதிகரிக்க கபசுர குடிநீர்” 02.04.2020 முதல் வீடு வீடாக நேரில் சென்று வழங்கப்பட்டு வருகிறது. முதல் சுற்று முடிவடைந்த நிலையில் தற்போது இரண்டாம் சுற்றாக பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்க வேண்டி உள்ளதால் அதற்கு தேவையான 7.5. லிட்டர் அளவுடைய 12 ஸ்டீல் கேன்கள் (Stainless Steels) வாங்கி பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.18000/-க்கும் (பதினெட்டாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பொதுமக்களின் நலன் கருதி “கபசுர குடிநீர்” வழங்க 12 ஸ்டீல் கேன்கள் வாங்கி பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**.298/2020/எச்1)